# ஞானகுரு

மாதப் பத்திரிகை.







## கார்த்திகை மாத
# அனுபந்தம்.

உங்கள் ஜன்ம ராசிப்பலன்,
நக்ஷத்திரப் பலன்,
அதிர்ஷ்ட நாட்கள்,
சந்திராஷ்டம நாட்கள்
முதலியவை அடங்கியுள்ளன.



1329
1329 / 4-54
OFFICE OF ... BOOKS
28 DEC 1954
MADRAS

விலை அணா 2.

பிரசுரிப்பாளர்கள்:—
"ஞானகுரு" பதிப்பகம்,
5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை, (S. I.)

# " ஞானகுரு "

தமிழ் மாதம் முதல்தேதி தோறும் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிகை. அணா 6.

இந்தியா வருடச்சந்தா ரூ. 3. எந்த மாதத்திலிருந்தும் சந்தா சேரலாம். சிலோன், சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடு ரூ. 4. வி. பி. கிடையாது. சந்தா மணியார்டர் செய்க.

☞ ஞானகுரு வெளியாகும் தேதியில், தனியாக ஜன்மராசிப் பலன் மாத்திரம் விளம்பரங்களுடன் ஞானகுரு ஜன்மராசி அநுபந்தம் என்ற பெயரில் வெளியாகும். விலை அணா 2. அநுபந்தத்திற்கு வருட சந்தா ரூ. 1-8-0.

விளம்பர விகிதம்:— உள் பக்கம் ரூ. 20. ½ பக்கம் ரூ. 10. ¼ பக்கம் ரூ. 5. ராப்பர் வெளிப்பக்கம் ரூ. 50. ராப்பர் உள்பக்கம் ரூ 40.

"ஞானகுரு" விசேஷ போஷகர்கள்:- *மதுரை*, ஸ்ரீ V. S. M. *இராஜாராமய்யர்*, ஸ்ரீ M. R. *வித்தியாசாகர்*, ஸ்ரீ V. S. M. *மோஹன்ராம்*, *பழநி*, ஸ்ரீலஸ்ரீ *ஸாது ஸ்வாமிகள்*. (*விசேஷ போஷகர் தொகை ரூ.* 501.)

"ஞானகுரு" சாதாரண போஷகர்கள்:— *சாதாரண போஷகர் தொகை ரூ. 101 செலுத்தியவரின்* குண விசேஷங்களைப்பற்றி ஒரு பக்கம் பிரசுரிப்பதன்றி, மாதா மாதம் அவருடையபெயர் ஞானகுருவில் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்:— S. G. இராமலிங்கம், B. A., சொற்பொழிவாளர்.
" ஞானகுரு " ஆபீஸ், 5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை.

Editor:- S. G. RAMALINGAM, B. A.,
**"GNANA GURU" Office, 5, Khanpalayam 3rd St., MADURAI.**

---


கூடிய சீக்கிரம் வெளிவரும்! முந்துங்கள்! முன் பணம் அனுப்புங்கள்!

ஹிருஷிகேஸம், சுவாமி சிவானந்தர் அவர்கள் எழுதிய
Advice to Women என்ற ஆங்கில நூல் மொழிபெயர்ப்பு.

# பெண்மணிகளுக்குப் பொன்மொழிகள்!

(**'ஞானகுரு' ஆசிரியர் தமிழாக்கியது.**)

இந்நூல் கிரவுன் 1×16 அளவில் கிளேஸ் காகிதத்தில் சுமார் 200 பக்கங்களில் கனத்த அட்டைப் பைண்டுடன் பிரசுரிக்கப்படும்.

விலை ரூ. 2—8—0. தபால் சிலவு 12 அணா.

☞ 1—1—1955 தேதிக்குள் முழுத்தொகையும் அனுப்புவோர்க்கு ஒரு பிரதிக்கு தபால் சிலவுள்பட ரூ. 2–12–0 ஆகும்.

மணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம்:—
**மானேஜர், " ஞானகுரு " பதிப்பகம்,** (முன் பணம்)
5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S. I.)

செந்தமிழ்நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள் ராஜா பார்லி பிஸ்கட்.

ஸ்தாபிதம் 1926

போன் நீர். 334.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

PRO. A. சங்குபிள்ளை, 115. திண்டுக்கல்ரோடு, மதுரை.

நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர் நீர். 143106.

**ராஜா பிஸ்கட் கம்பெனி, 115, திண்டுக்கல் ரோடு, மதுரை.**

கிளை:— மெயின் ரோடு, திண்டுக்கல்.

ஏஜெண்டுகள்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ | A. வெங்கிடாஜலமய்யர் ... ... | திருநெல்வேலி. |
| ,, | S. ஷண்முகக் கோனார் ... ... | கோவில்பட்டி. |
| ,, | A. S. பாலையா நாடார் ... ... | சாத்தூர். |
| ,, | M. K. அழகராஜா ... ... | இராஜபாளையம். |
| ,, | V. A. ரத்தினசாமி அன் V. பழனிச்சாமி ... | சின்னமனூர். |
| ,, | N. அழகர்சாமி நாயுடு ... ... | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| ,, | K. V. D. & சன்ஸ் ... ... | போடிநாயக்கனூர். |
| ,, | A. முத்திருளாண்டி பிள்ளை, 3 லாந்தர் பக்கம், | பெரியகுளம். |
| ,, | R. சீனிவாச அய்யங்கார் ... ... | நத்தம். |
| ,, | K. சுப்பையா பிள்ளை ... ... | மதுரை. |
| ,, | S. P. K. நடராஜன் செட்டியார் ... ... | மதுரை. |
| ,, | M. R. N. ஆச்சாரி ... ... | மதுரை. |
| ,, | L. V. ஷண்முகம் பிள்ளை, டவுன்ஹால் ரோட், | மதுரை. |

உரிமையாளர்: ஆ. சங்கு பிள்ளை.

உயர்ந்த ஸ்ரீ முருகன் ரெடிமேட் ஆடைகள்

பனியன், ஜவுளி ரகங்கள்,

SRI MURUGAN DRESS MFG Co., MADURA

காற்று தலையணை, & கொசு வலைகள்.

ஏராளமாக ஸ்டாக் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:-

**ஸ்ரீ முருகன் டிரஸ் ஸ்டோர்ஸ்,**

**2 & 104, அம்மன் சன்னதி, மதுரை.**

கிளைகள்:- தஞ்சாவூர், கும்பகோணம் & காரைக்குடி.




# என். எம். பி.

## குளுகோ &

## பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு இணையற்ற உணவு!

உரிமையாளர்:-

**என். எம்.**

**பொன்னுச்சாமி பிள்ளை,**

59, கோரிப்பாளையம், **மதுரை.**

பிராஞ்சு:-

20, தளவாய் அக்ரஹாரம்,

**மதுரை.**

# எங்கள் பிரசித்திபெற்ற தயாரிப்புகள்.

பாரத் இங்க்
பாரத் மார்கிங் இங்க்
பாரத் ரப்பர் ஸ்டாம்பு இங்க்
கேசரி இங்க் பவுடர்
பாரத் நீலகிரி தைலம்
காமதேனு நீலகிரி தைலம்
பாரத் டின்சர் அயோடின்
பாரத் வாசனை சாந்து

மாலா டாய்லட் பவுடர்
மாலா கண் மை
சிபாகோ டாய்லட் பவுடர்
குமாரி கண் மை
காமதேனு பிரஞ்ச் பாலிஷ்
சிவபதி மருந்து
சிபாகோ இன்செக்ட் பவுடர்.

*Manufacturers:—*

## பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்,

**32, மஹால் 5-வது தெரு, மதுரை.**

# ஞானகுரு அநுபந்தம் {GNANA GURU SUPPLEMENT.}

## 1954ஆு நவம்பர் 16௳ முதல் டிசம்பர் 15௳ வரை
## ஜன்மராசிப் பலன் [ஜயஆு கார்த்திகைமீ]

| | | | |
|---|---|---|---|
| | | | கே. |
| | நவம்பர் 16௳ காலை 9 மணிக்கு கிரக நிலை. | | குரு சந். |
| செ. | | | |
| ரா. | சூ. | பு. சு. சனி | |

**கிரகப் பெயர்ச்சிகள்:-**

நவ. 24௳ கும்பத்திற்கு செவ்வாய்.
நவ. 29௳ விருச்சிகத்திற்கு புதன்.

மேஷ ராசி:- (அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி செவ்வாய் தனது காலில் சஞ்சரித்து உச்சம் பெற்றிருப்பதால், டிச. 4-ம் தேதி வரை திடீர்ப் பணப்ராப்திகளுக்கு யோகம் உண்டு. சித்திரை, ஆவணி மாதம் பிறந்தவர்களுக்கு இந்த யோகம் விசேஷமானது. வண்டி, வீடு, நிலம் முதலியவற்றில் பிற் போக்கு எனக் கூறமுடியாது. ஆத்மீய விஷயங்களில் ஆழ்ந்த கவனஞ் செலுத்துவார்கள். ஆடி மாதம் பிறந்தவர்களுக்கு வீடு, நிலம் இவை சம்பந்தமாய் விவகாரங்கள் எழலாம். புத்திரர்களுக்குப் பீடை இல்லை. மனைவி சுகத்திற்குக் குறைவில்லை. ஆடி மாதம் பிறந்தவர்களுக்கு இது விசேஷம். டிசம்பர் 6, 7, 8 தேதி களில் சத்துருக்கள் தோற்றுப் போவார்கள். நவ. 17, 18, 19, டிச. 15, 16 தேதிகளில் பதவி, சம்பளம் சார்பில் மேலதிகாரிகளைக் கண்டு பேசவேண்டாம். தை மாதம் பிறந்தவர்களுக்கு இந்தப் பலன் கடுமையாயிருக்குமாதலால், மேலதி காரிகளுடன் பேச்சு வைத்துக் கொள்ளலாகாது மேற்கண்ட தேதி களில். குரு இருள் நிலையிலிருப்ப தால், சென்றவிடங்களில் பேச்சு கொடுப்பதில் எச்சரிக்கையாயிருக்க வும். அதிர்ஷ்டம் கம்மி எனலாம். ஆனால் முயற்சியால் ஒருவாறு நிலைமையைச் சமாளிக்கலாம். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 10, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- நவ. 24௳ புதன் இரவு 11 மணிமுதல் 27௳ சனி காலை $11\frac{1}{2}$ மணிவரை உண்டு.

விருஷப ராசி:- (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகணி, மிருகசிரிஷம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்கிரன் நவ. 19-ம் தேதி உதயமாவதால், அன்றுமுதல் 26-ம் தேதிவரை வாக்கு சாணயமும், குடும்ப ஒற்றுமையும், சுக சௌகரியங்களும், நாடகம், நாட்டியம் இத்தியாதி கேளிக்கைகளில் கலந்துகொள்வதால் இன்பமும் உண்டாகும். வைகாசி, மாசி மாதங் களில் பிறந்தவர்களுக்கு இப்பலன் விசேஷம் எனலாம். வீடு, வண்டி, நிலம் முதலியவற்றில் முற்போக்கும் லாபமும் உண்டு. பந்துமித்திரர்கள் அன்பாக நேசிப்பார்கள். டிச. 8, 9, 10 தேதிகளில் சத்துருக்கள் பணிந்து விடுவார்கள். கும்ப லக் கினங்கொண்ட இந்த ராசிக்காரர் களுக்கு புது மனை புகுதலும், சுக போகப் பிராப்திகளும், மனைவி மூலம் லாபமும் உண்டாகும். நவ. 24-ம் தேதிக்குள் திடீர் பணப்ராப்தி

கள் ஏற்படக்கூடும். சனி பார்வை
இருப்பதால், தொகை பெரிதாயிராது.
புத்திரர்களுக்கு அதிர்ஷ்டங்கள்
இல்லை. தொழிலில் பிரபல யோக
மென்று கூறுவதற்கில்லை. நவம்பர்
24 ம் தேதிக்குமேல் பூமி சம்பந்த
மான விவகாரங்கள் தீர்ந்துபோகும்.
பிடிவாதம் பண்ணி தங்கள் காரி
யத்தைச் சாதிக்கவும் செய்வார்கள்.
வைகாசி மாதத்தில் ரிஷப லக்கி
னத்தில் பிறந்த இந்த ராசிக்காரர்
களுக்கு இப் பிடிவாத குணம் அபார
மெனலாம். 3-ல் குரு கெட்டபலன்
தரமாட்டார். என்றாலும், தக்ஷிணா
மூர்த்தியை வழிபடவும். மாசி மாதம்
பிறந்தவர்களுக்கு மனைவி மூலம்
மிகுந்த அநுகூலங்கள் ஏற்படும்.
நவ. 20, 21, 22 தேதிகளில் பதவி,
சம்பளம் சார்பில் மேலதிகாரிகளைப்
பேட்டி கண்டு பேசுதல் கூடாது.
நவ. 24-ம் தேதிக்குள் சித்திரை
மாதம் பிறந்தவர்கள் குரு உபதேசத்
தால் நன்மை பெறலாம். நவ. 29-ம்
தேதிக்குள் வைகாசி மாதம் பிறந்த
வர்களுக்கு பணமுடை தீரும்.
சிலருக்கு மூலஸ்தானத்தில் நோய்
உண்டாகி, பரிகாரத்தால் தீரும்.
ரோகணி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்
களுக்கு கஷ்டங்கள் குறையும்;
லாபம் குறையும்; உடலுக்கு
கோளாறுகள் உண்டாகி விலகும்.
அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, டிச.
1, 6, 10, 12, 13 தேதிகள். சந்தி
ராஷ்டமம்:- நவ. 27உ சனி காலை
11½ மணி முதல் 29உ திங்கள்
இரவு 12 மணிவரை உண்டு.

மிதுன ராசி:- (மிருகசிரிஷம்
3-ம் பாதம் முதல் திருவாதிரை,
புனர்பூசம் 3-ம் பாதம் முடிய)
இலக்கினாதிபதி புதன் அஸ்தமன
மாகிற டிச. 1-ம் தேதிவரை மிருக
சீரிஷம் 4-ம் பாதத்தில் பிறந்தவர்
களுக்குத் திடீர் ஏற்றத் தாழ்வுகள்
பண விஷயத்தில் ஏற்படும்;
தொழில் பரவாயில்லை. மிருகசீரிஷம்
3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு
பணமுடை கொஞ்சம் தான்;
தொழிலில் முன்னேற்றம் உண்டு.
திருவாதிரை 1, 2, 3 பாதங்களில்
பிறந்தவர்களுக்கு தொழிலில் லாப
மும், முன்னேற்றமும், பணப்ராப்தி
களும் உண்டாம். திருவாதிரை 4-ம்
பாதத்தில் பிறந்தவர்களுக்கு தொழி
லில் அலைச்சலும், பகையும், விரோ
தங்களும் உண்டாகும்; ஆனால் உத
விக்கு ஆள் வந்து சேருவர். புனர்
பூசம் 1, 2 பாதங்களில் பிறந்தவர்
களுக்கு தொழில் முன்னேற்றமும்,
பணப்ராப்திகளும் உண்டு. 3-ம்
பாதத்தில் பிறந்தவர்களுக்கு தொழி
லில் பிற்போக்கும், சென்றவிட
மெல்லாம் செலவுகள் மயமாயும்
முடியும். பொதுவாக இந்த ராசிக்
காரர்களுக்கு வண்டி, வீடு, நிலம்
இவற்றில் நவ. 29-ம் தேதிக்குள்
லாபமுண்டு; தொழிலில் சாதக
பாதகங்கள் கலந்து வரலாம்.
ஆனாலும் சமாளிக்கக்கூடிய திறமை
உண்டாம். டிச. 10, 11, 12 தேதி
களில் எதிரிகள் அடிபணிவார்கள்.
நவ. 22, 23, 24 தேதிகளில் மேலதி
காரிகளுடன் அல்லது யஜமானர்க
ளுடன் பேட்டி வைத்துக்கொள்ளக்
கூடாது. சிலருக்கு முகத்தில்
பருக்கள் உண்டாகவும், காயங்கள்
படவும் செய்யும். வியாபாரிகளின்
முற்போக்கு தடைப்படும். அதிர்ஷ்ட
நாட்கள்:- நவ. 21, 28, டிச. 6, 12,
13 தேதிகள். சந்திராஷ்டமம்:- நவ.
29உ திங்கள் இரவு 12 மணிமுதல்
டிச. 2உ வியாழன் காலை 8 மணி
வரை உண்டு.

கடக ராசி:- (புனர்பூசம் கடைசி
பாதம்முதல் பூசம், ஆயில்யம்முடிய)
இலக்கினத்தில் குரு இருப்பதால்,
முதலில் எதிர்ப்பும், பிறகு நன்மை

யும் ஏற்படும். வண்டி, வீடு, நிலம் இவற்றில் லாபமும், அநுகூலமும் அதிகம். ஆடி மாதம் பி—கு இந்த லாபம் அபாரம்; கடக லக்கினத்திற்கும் இதே பலன். புத்திரர்களுக்கு உஷ்ணாதிக்க ரோய் கண்டு விலகும். வியாபாரத்தில் முற்போக்கும், அநுகூலமும் உண்டு. களத்திரத்திற்குக் கொஞ்சம் இருமல் உண்டாகி விலகும். 4-ல் சனி (கண்டச் சனி) பீடித்துள்ளதால் சனீஸ்வர பகவானை அர்ச்சிக்கவும். நவ. 15, 16, 17, டிச. 12, 13, 14 தேதிகளில் சத்துருக்கள் மண்ணைக் கவ்வுவார்கள். நவ. 24, 25, 26, 27 தேதிகளில் பதவி, சம்பளம் சார்பாக யாரையும் பேட்டி காணலாகாது. தொழிலில் முற்போக்கு உண்டு. புனர்பூசம் 4-ம் பாதத்தில் பி—கு, மேற்கூறிய பொதுப்பலன்கள் ஸ்பஷ்டமாக நடைபெறக்கூடும். பூசம் 1, 3, 4 பாதங்களில் பி—கு, பூர்வீகச் சொத்துக்களின் கிரய மதிப்பு ஏறும்; புத்திரப்ராப்திகள் உண்டாகும்; மனத்தில் சந்தோஷம் பொங்கும். பூசம் 2-ம் பாதத்தில் பி—கு, பூர்வீகச் சொத்துக்கள் நஷ்டத்துடன் கையை விட்டுப் போகும்; புத்திர பீடையும், மனத்தில் சஞ்சலமும் ஏற்படும். ஆயிலிய ந—பி—கு, நவ. 29-ம் தேதிவரை தன லாபங்களும், நவ. 26-ம் தேதி முதல் டிச. 10-ம் தேதிவரை அநுகூலமும், பந்துமித்திரர்களின் மூலம் கார்த்திகை மாதம் பூராவும் உதவியும், களத்திரத்தின் வழியில் நன்மையும், டிச. 4-ம் தேதிவரை தொழிலில் அநுகூலமும் உண்டாகுமென்பதில் தடையில்லை. அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 6, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 2உ வியாழன் காலை 8 மணி முதல் 4உ சனி பிற்பகல் 1 மணி வரை உண்டு.

---

சிம்ம ராசி:- (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி சூரியன் ஷஷ்டாதிபதியின் காலில் சஞ்சரிப்பதால், ரோகக் கோளாறும், நிஷ்டூரமும், கடன் உபாதைகளும் உண்டாகும் டிச. 2-ம் தேதிவரையில். புத்திரர்களால் எதிர்பாராச் சிலவுகள் உண்டாகும். தனப்ராப்திகளுக்குக் குறைவில்லை. வண்டி, நிலம் முதலிய அயிட்டங்களில் முன்னேற்றமும், லாபமும் உண்டு. பந்துமித்திர சுக க்ஷேமத் தகவல்கள் கிடைக்கும். புத்திரர்களுக்குப் பீடை உண்டு. வியாபாரத்தில் லாபமும், முற்போக்கும் உண்டு. களத்திர ஒற்றுமை உண்டு. தொழிலில் சுய முயற்சியால் மேன்மையும், நன்மையும் ஏற்படும். குரு 12-ல் இருப்பதால், தக்ஷிணாமூர்த்திக்கு அவசியம் அர்ச்சனை செய்யவும். நவ. 17, 18, 19, டிச. 14, 15, 16 தேதிகளில் எதிரிகளை முறியடிப்பார்கள். நவ. 27, 28, 29 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமாய் யஜமானர்களுடனோ, மேலதிகாரிகளுடனோ பேச்சு வைத்துக்கொள்ளலாகாது. மகம் ந—பி—கு, குரு 12-ல் இருப்பினும் கெடுதல் செய்யாது; சனியும் கெடுதல் செய்யாது; தனப்ராப்திகள் உண்டு; தொழிலில் பிற்போக்கு போலத் தோன்றி முன்னேற்றம் காட்டும். பூரம் ந—பி—கு, சனியின் ஸ்திதி கெடுதல் செய்யும்; குருவும் கெடுதல் செய்யும்; பணமுடையால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் தொழில் நன்கு சாசுவதமாய் நடைபெறும். உத்திரம் 1-ம் பாதம் பி—கு, குரு நன்மையும், மறைவா

---

பி-கு = பிறந்தவர்களுக்கு    ந-பி-கு = நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு

யிருந்து சனி நன்மையும் செய்யும். நவ. 27-ம் தேதிமுதல் டிச. 1-ம் தேதிவரை பணப்ராப்திகளும், நவ. 26-ம் தேதிமுதல் டிச. 15-ம் தேதி வரை தொழிலில் லாபமும் ஏற்படும். பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்கு, முக்கியமாய் ஆவணி மாதத்திலே, சிம்ம லக்கினத்தில் பி—கு, தொழிலில் அபிவிருத்தியும், லாபங்களும், விஜித அநுகூலங்களும் உண்டாகும். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 4உ சனி பிற்பகல் 1 மணிமுதல் 6உ திங்கள் பிற்பகல் 4 மணிவரை உண்டு.

---

கன்னியா ராசி:- (உத்திரம் 2-ம் பாதம்முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம்முடிய) இலக்கினாதிபதி புதன் டிச. 1-ம் தேதி அஸ்தமிப்பதால், அன்றுமுதல் தேகாரோக்கியமும், வியாபார முன்னேற்றமும், வாக்கு நாணயமும் கம்மி. சகாயம் வருவது அரிது. அலைச்சல் கவலை; சஞ்சலம் வலுக்கிறது. வீடு, வண்டி, நிலம் ஆகியவற்றில் ஏதோ ஓரளவு முன்னேற்றம் காணலாம். புத்திர பீடை விலகிற்று. விடா முயற்சியால் சாதித்த காரியங்கள் வீண் போகா. பலனைக் கருதாமல் பண்ணும் செயல்கள் உங்களைப் பரவசப்படுத்தும். சனி 2-ல் இருப்பதால், சனீஸ்வர பகவானை மறக்காமல் அர்ச்சனை செய்யவும். நவ. 19, 20, 21 தேதிகளில் பகைவர்கள் படுதோல்வி அடைவார்கள். நவ. 30, டிச. 1 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களையே எடுக்கலாகாது. உத்திரம் 2-ம் பாதம் பி—கு, குரு கெடுதி செய்யும்; சனி நன்மை செய்வது போலத் தோன்றி கெடுதி செய்யும்; பணப்ராப்திகள் உண்டு; சமாராகத் தொழில் நடைபெறும். உத்திரம் 3, 4 பாதங்களில் பி—கு, மேற்கண்ட பலன்களில் அரைவாசி நடக்கும். அஸ்தம் ந—பி—கு, சனியும், குருவும் நன்மை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சித்திரை 1-ம் பாதம் பி—கு, ஆயிரம் இடைஞ்சல்கள் கிளம்பினாலும் அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி முரசு கொட்டக்கூடிய சாமர்த்தியம் உண்டு. சித்திரை 2-ம் பாதம் பி—கு, சனி நேர்முகமாய் நன்மையும், குரு மறைமுகமாய் நன்மையும் செய்வார்கள். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 10, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 6உ திங்கள் பிற்பகல் 4 மணிமுதல் 8உ புதன் மாலை 5 மணிவரை உண்டு.

---

துலா ராசி:- (சித்திரை 3-ம்பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்கிரன் சத்துருவின் கெதியில் வியாதிபதியின் சேர்க்கையிலிருப்பதால், தேக அசௌகரியங்களும், தொழிலில் இடைஞ்சல்களும் உண்டாகும். வண்டி, வீடு, நிலம் முதலியவற்றில் அநுகூலமும், லாபமும் ஏற்படும். பந்து மித்திரர்களிடமிருந்து நற்செய்திகள் எட்டவுங்கூடும். புத்திரர்களும் ஒற்றுமையாயிருப்பார்கள். தொழிலில் சுமாரான முற்போக்குண்டு. 7½ நாட்டேச்சனியின் 2-வது கூறு ஆனதால் மேற்கண்ட பலன்கள் மங்கும். சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனை பண்ணி வழிபடவும். குரு 10-ல் இருப்பதால், தொழிலில் அடிக்கடி தடையும், தடங்கலும் உண்டாகும். நவ. 22, 23, 24 தேதிகளில் பகைவர்கள் அபஜயமடைவார்கள். டிச. 2, 3 தேதிகளில் பதவி, பட்டம், உத்தியோக

சம்பந்தமான முயற்சிகளில் பேச்சு வார்த்தை தொடங்கலாகாது. சித்திரை 3-ம் பாதம் பி—கு, மேற்கண்ட பலன்கள் ஸ்பஷ்டமாயும், கண்டிப்பாயும் நடக்கும். சித்திரை 4-ம் பாதம் பி—கு, நவ. 23-ம் தேதி முதல் நல்ல பலன்களைக் கொடுக்கும். சுவாதி 1-ம் பாதம் பி—கு, பணமுடை தலைகாட்டும். சுவாதி 2-ம் பாதம் பி—கு, சகாயம் செய்பவர்கள் குறைவார்கள்; செலவுகள் குறையும்; டிச. 8-ம் தேதிமுதல் ஒரு வாரம் வரை சுபயோகங்களும், லாபமும் பெருகும். சுவாதி 3, 4 ம் பாதங்களில் பி—கு, சஞ்சலமும், சச்சரவும் உண்டாகும். விசாகம் ந—பி—கு, குரு நன்மையே செய்வார்; சனிகூட தீமை செய்யார். எனவே விசாக நக்ஷத்திரத்தில் பி-கு 7½ நாட்டுச்சனியின் கஷ்ட நிஷ்டூரங்கள் வெகுவாகக் குறையும். இந்த கார்த்திகை மாதம் பூராவும் பொதுவாய், மூத்த சகோதரர்களின் உதவி சமயத்தில் ஆதரவு அளிக்கும். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 28, டிச. 1, 6, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 8உ புதன் மாலை 5 மணிமுதல் 10உ வெள்ளி பிற்பகல் 2½ மணிவரை உண்டு.

---

விருச்சிக ராசி:- (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய) இலக்கினாதிபதி செவ்வாய் நவ. 24-ம் தேதி கும்பத்திற்குச் செல்வதால், இவர்களுக்கு மிகுந்த செல்வாக்கும், கீர்த்தியும், வாக்கு நாணயமும், கடன் உபாதைகள் நீங்குதலும் உண்டாகும். வண்டி, வீடு, நிலம் இவற்றில் பிற்போக்கே நேரிடும். பந்துமித்திரர்கள் விரோதங்கள் பாராட்டுவோர்கள். புத்திர அநுகூலங்களும், ஆதரவுகளும் அமோகமெனலாம். களத்திர வர்க்கத்தின்மூலம் வரும் உபகாரத்தினால் உபயோகமில்லை. மனம் சஞ்சலமில்லை; உற்சாகத்தினால் ஊக்கங்கொள்ளும். நவ. 24, 25, 26, 27 தேதிகளில் எதிரிகளின் கை ஓங்கிவிடும். டிச. 4, 5, 6 தேதிகளில் சம்பளம், பதவி விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அனுஷம் ந—பி—கு, பணக்கஷ்டம் உண்டாவதுபோல் தோன்றி பணப்ராப்திகள் உண்டாகும்; பந்துமித்திரர்களின்மூலம் நல்ல செய்தி கிடைக்கும்; டிச. 2-ம் தேதிமுதல் தொழிலில் பிரபல அதிர்ஷ்டம் உண்டாகும்; வியாபாரத்தில் முற்போக்கும் களத்திர அநுகூலங்களும் உண்டு. கேட்டை ந—பி—கு, பணப்ராப்திகளும், புத்திர ஒற்றுமையும், மனக்குதூகலமும், முகத்தில் தேஜஸும் உண்டாகும்; தைரியமும், உற்சாகமும் அதிகரிக்கும்; பந்துமித்திரர்கள் மூலம் நல்ல செய்தி கிடைக்கும்; டிச. 2-ம் தேதிமுதல் தொழிலில் சுமாரான யோகம் எனலாம். இந்த ராசிக்காரர்களில் விருச்சிக லக்கினத்திலும், கார்த்திகை மாதத்திலும் பிறந்தவர்கள் கட்டாயம் சனீஸ்வர பகவானை அர்ச்சிக்கவும். தக்ஷிணாமூர்த்தியையும் வழிபடலாம் —குரு பாதகத்தி லிருப்பதால். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 6, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 10உ வெள்ளி பிற்பகல் 2½ மணிமுதல் 12உ ஞாயிறு பிற்பகல் 4 மணிவரை உண்டு

---

தனூர் ராசி:- (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி குரு சனியின் காலிலும், சனி குருவின் கதியிலும் மாறி சஞ்சரிப்பதால், மார்கழி மாதத்தில் தனுசு லக்கினத்தில் பி—கு, நல்ல தனப்ப்ராப்தியும், தைரியமும், சகோ

தார லாபமும், வண்டி, வீடு, நிலம் இவைகளில் முற்போக்கும், அநுகூலமும் உண்டாகும். சிலருக்குத் திடீர் திடீரெனக் கோபம் கொந்தளிக்கும்; எச்சரிக்கை! சோம்பலும் தொந்தரவளிக்கும். புத்திரர்களால் அநுகூலம் உண்டு. நவ. 27-ம் தேதி முதல் 29-ம் தேதிவரை வியாபாரத்தில் லாபமும், எதிர்பாராத உபகாரமும், களத்திர அநுகூலமும் உண்டாகும். 8-ல் குரு இருப்பதால் தக்ஷிணாமூர்த்தியை வழிபட மறக்கலாகாது. நவ. 27, 28, 29 தேதிகளில் பகைவர்களின் பலம் ஒடுங்கத்தான் செய்யும். டிச. 6, 7, 8 தேதிகளில் மேலதிகாரிகளுடனோ, யஜமானர்களுடனோ, பதவி, சம்பளம் விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. மூலம் ந—பி—கு, வாக்கு நாணயமும், வண்டி, வீடு, நிலம் இவற்றில் அநுகூலமும், சகோதர ஒற்றுமையும், எதிரிகளால் பல வகைகளில் தொந்தரவுகளும், நவம்பர் 23-ம் தேதிமுதல் 29-ம் தேதிவரை களத்திர பீடைகளும், தொழில் மந்தமும் ஏற்படும். பூராடம் ந—பி—கு, தேக உபாதைகளும், குருவின் கோபமும், வண்டி, வீடு, நிலம் இவற்றில் பிற்போக்கும், பந்துமித்திர பகையும் உண்டாகும்; பணப்ராப்திகள் சீராய் அமையும்; நவ. 29-ம் தேதிமுதல் டிச. 10-ம் தேதிவரை களத்திர பீடைகள் உண்டு; தொழிலில் மந்தமும், கஷ்ட நஷ்டமும் ஏற்படும். பொதுவாக இந்த ராசிக்காரர்களில் தனுர் லக்னத்திலும், மார்கழி மாதத்திலும் பிறந்தவர்களானால் மேற்கண்ட நக்ஷத்திர பலன்கள் ஸ்பஷ்டமாய் நடைபெறும். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 6, 10 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- நவ. 15உ திங்கள் காலை முதல் 17உ புதன் மத்தியானம் 12½ மணிவரையும், டிச. 12உ ஞாயிறு பிற்பகல் 4 மணிமுதல் 14உ செவ்வாய் இரவு 9 மணிவரையும் ஆக 2 சந்திராஷ்டமங்கள் உண்டு.

---

மகர ராசி:- (உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சனி நவ. 21உ உதயமாவதால், அன்று முதல் கீர்த்தியும், நாணயமும், பணப்ராப்தியும், குடும்ப ஒற்றுமையும் ஏற்படும். 10ல் சனியானதால், தொழில் முற்போக்கைப் பாதிக்கும். சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனை செய்க. அபாரமான தைரியமும் ஊக்கமும் உண்டாகும்; அவைகளுக்கு ஏற்றாற்போல செலவுகளும் கட்டுக்கடங்காமற் போகும். வண்டி, வீடு, நிலம் இவற்றில் முற்போக்கும் லாபகரமும் உண்டாகும். புத்திரர்களுக்குச் சுகக்ஷேமம் விருத்தியாகும். களத்திர சுகம் உண்டு. தொழிலில் கடன்காரர்கள் நெருக்குவார்கள் வியாபார மந்தம் உண்டு. நவ. 30, டிச. 1; 2 தேதிகளில் சத்துருக்கள் தோற்றுப் போவார்கள் என்பது உறுதி. யஜமானர்களுடன், மேலதிகாரிகளுடன் டிச. 8, 9, 10 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. உத்திராடம் ந-பி-கு, கோபமும், பணமுடையும், குடும்ப நிஷ்டூரமும், வாய்ப்புண்ணும், நேத்திரரோகமும் உண்டாகும்; புத்திரர்களுக்கு பீடையும், தொழிலில் பிற்போக்கும் ஏற்படும். திருவோணம் ந-பி-கு, கோபந் தணிதலும், பணப்ராப்திகளும், குடும்ப ஒற்றுமையும், முகத்தில் தேஜஸும் உண்டாகும்; தொழில் அநுகூலமும் சாதகமும் உண்டாகும். அவிட்டம் 1, 2 பாதங்களில் பி-கு, முகவாட்டமும், பணக்கஷ்டமும், தேகபீடை

யும் உண்டாகும்; தொழிலில் எதிர்பாராத இடைஞ்சல்கள் உண்டாவதோடு எதிரிகள் கிளம்புவார்கள்; சிலருக்கு வாதரோகம் உண்டாகும். தைமாதம் மகா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மேற்கண்ட பலன்கள் கச்சிதமாய் நடைபெறும். இந்த ராசிக்காரர்கள் சனிபகவானை மறக்கவே கூடாது; அவரை சனிதோறும் வழிபடவும். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, டிச. 1, 5, 6, 10, 12, 13 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- நவ. 17௳ புதன் மத்தியானம் 12½ மணி முதல் 19௳ வெள்ளி இரவு 8½ மணி வரையும், டிசம். 14௳ செவ்வாய் இரவு 9 மணி முதல் 16௳ வியாழன் முடியவும் ஆக 2 சந்திராஷ்டமங்கள் உண்டு.

---

கும்ப ராசி:- (அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சனி பாதகத்தில் குருவின் கதியிலும், குரு சனியின் கதியிலும் சஞ்சாரம் பண்ணுவதால், வரவு செலவு சமமாயும் லாபயோகமாயும் வாழ்க்கை நடைபெறும். தைரியமாய் தொழிலில் ஈடுபட்டாலும் அதெல்லாம் செலவுக்குக் கட்டாமல் பணமுடை உண்டாகும். வீடு, நிலம், பூமி இவற்றில் சாதகநிலை காணப்படுகிறது. கார்த்திகை மாதம் முதற்பாதியில் புத்திர சுகமும், பிற்பாதியில் புத்திர பீடையும் உண்டு. களத்திர ஒற்றுமையும் அநுகூலங்களும் ஏற்படும். தொழில் நடந்தது போலவே தெரியும்; செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. தக்ஷிணாமூர்த்தியை மறக்காமல் அர்ச்சனை செய்க. டிசம். 2, 3, 4 தேதிகளில் சத்துருக்கள் தோற்று வீழ்வார்கள். டிச. 10, 11, 12 தேதிகளில் மேலதிகாரிகளுடன் சம்பள விஷயமாய்ப் பேசக்கூடாது. அவிட்டம் 3, 4 பாதங்களில் பி-கு, மனைவியுடன் நிஷ்டூரம் உண்டாகும்; டிச. 4௳ முதல் தொழிலில் முற்போக்கு தென்படுகிறது; பணக் கஷ்டம் போலத் தோன்றி பணப்பிராப்திகள் உண்டு. சதயம் ந-பி-கு, தேகாரோக்கியமும், அபாரச் செலவுகளும் உண்டாகும்; பணமுடையால் மனவாட்டம் உண்டு; வண்டி, வீடு, நிலம் இவற்றில் சாதகமும், தொழிலில் சுமாரான யோகமும் காணப்படுகின்றன. பூரட்டாதி ந-பி-கு, பணப்பிராப்திகளும் குடும்ப ஒற்றுமையும் உண்டு; சென்றவிடமெல்லாம் சிறப்பு வளரும்; வண்டி, வீடு, நிலம் இவற்றில் மகா சாதகம் தென்படுகிறது; கார்த்திகை முற்பாதியில் களத்திரத்துடன் ஒற்றுமையும் சுகமும் விருத்தியாகும்; தொழில் மும்முரமாய் நடைபெறலாகும். மாசி மாதம் கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு இப் பலன்கள் எழுத்துக்கெழுத்து சரியாய் நடைபெறும். அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 28, டிச. 1, 6, 10, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- நவ. 19௳ வெள்ளி இரவு 8½ மணி முதல் 22௳ திங்கள் பகல் 11½ மணிவரை உண்டு.

---

மீன ராசி:- (பூரட்டாதி 4-ம் பாதம்முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய) இலக்கினாதிபதி குருவும் சனியும் ஒருவர் கதியில் மற்றொருவர் இருப்பதால் தேகாரோக்கியமும் லாபமும் சுமாராயிருக்கும். பணப்பிராப்திகள் உண்டு. முகத்தில் காயங்கள் உண்டாகாதபடி எச்சரிக்கையோடு இருக்கவும். புத்திர சுகமும் ஒற்றுமையும் உண்டு. களத்திர ஒற்றுமையில் வேறுபாடு உண்டு. அட்டமச்சனியாதலால் சனீஸ்வர பகவானுக்குப் பிரீதியாய் அர்ச்சனை செய்க. தொழிலில் சாதகமும் முற்போக்கும் உண்டு. டிச. 4, 5, 6 தேதிகளில் பகைவர்கள் பணிந்து வருவார்கள்,

# செய்திகள்.

## ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்தசுவாமிகள் டில்லியில் யக்ஞம் நடத்துகிறார்கள்.
(61 நாள் யக்ஞம்)

26—9—54உ புது டில்லியில் ஞான யக்ஞத்தை மந்திரி டாக்டர் கைலாசநாத் கட்ஜூ அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு திடீர் மழையின் காரணமாய் சில நாட்கள் உபந்நியாசங்கள் நின்றன. அக்டோபர் 5உ முதல் மீண்டும் தொடங்கின. புதுப் புது அன்பர்களும் பக்தர்களும் திரண்டு வருகின்றனர். ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த சுவாமிகள் கதோபநிஷதம் என்னும் உபநிஷத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்றுகிறார்கள் ஆங்கிலத்தில். கதோபநிஷதம் முதல் பாகம் யக்ஞ பிரஸாத் (YAGNA PRASAD) என்ற ஆங்கில வெளியீட்டின் மூலம் நன்கொடையாளர்களுக்கு 3—11—54உ கிடைத்திருக்கலாம். இனி யக்ஞ பிரஸாத் தாமதமாகாமல் கிடைக்கும்படி செய்வார்கள்.

கீர்த்தன ஹாலில் அகண்ட மஹா மந்திரம் (இடைவிடாமல் இரவும் பகலும் மஹா மந்திரம் உச்சரித்தல்) நவம்பர் மீ 26உ தொடங்கி 21 நாட்கள் நடைபெறும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யக்ஞ பிரஸாத் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் வெளியாகின்றன. தேவையுள்ளவர்கள் "Committee Office, 4, Jantar Mantar Road, New Delhi" என்ற விலாசத்திற்கு நன்கொடை அனுப்பிப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி காரியதரிசி விரும்புகிறார்.

யக்ஞத்திற்கு வந்து கலந்துகொள்பவர்களுக்கு சகல வசதிகளும் செய்துள்ளார்கள். அடியிற்கண்ட விலாசத்திற்கு முன்கூட்டியே எழுதுங்கள்.

Shiela Puri, Secretary,
Gyana Yagna Committee, 4, Jantar Mantar Road, New DELHI.

---

நவ. 15, 16, 17, டிச. 12, 13, 14 தேதிகளில் மேலதிகாரிகளுடன் அல்லது யஜமானர்களுடன் சம்பள விஷயமாய் பேச்சு எடுக்கலாகாது. உத்திரட்டாதி ந-பி-கு, தேக பீடையும், தொழில் முடையும் உண்டாவது போலத் தோன்றி தேகாரோக்கியமும் தொழில் முன்னேற்றமும் ஏற்படும்; கார்த்திகை மாதம் பிற்பாதியில் கடன் தொல்லை ஒழியும்; மனைவிக்கு வாத சம்பந்தமாக ரோகம் காட்டி விலகலாம். ரேவதி ந-பி-கு, தேக ஆரோக்கியமும், தொழில் முன்னேற்றமும் உண்டாகும்; களத்திர பீடை கிடையாது; மூத்த சகோதரர்கள் உதவி செய்வார்கள். பங்குனி மாதம் மீன லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு இப் பலன்கள் சரியாக நடைபெறும். ஜீவாதாரமாகிய குரு இருள் நிலையிலிருப்பதாலும், அஷ்டமத்தில் சனி இருப்பதாலும், நீங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் அநேகம் தட்டுத்தடுமாறியே நடைபெறலாம்; சில முயற்சிகள் வீணாகிவிடும். தொழில் ஸ்தானத்தில் ராகு இருப்பதால், தொழிலில் சற்று பாதகநிலை ஏற்பட்டு விலகும். எதிலும் எச்சரிக்கையும் நிதானமும் கொள்வதில் தவறலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- நவ. 21, 28, டிச. 1, 6, 10, 12, 13 தேதிகள். சந்திராஷ்டமம்:- நவ. 22உ திங்கள் பகல் 11½ மணி முதல் 24உ புதன் இரவு 11 மணி வரை உண்டு.

## ஒரு பத்தி ஒரு அங்குல விளம்பரங்கள்: தடவைக்கு அங்குலம் ரூ. 2.

எல்லாவித கைத்தறிகளுக்கு வேண்டிய உயர்தரமான அச்சு, விழுது, நாடா, தார்குச்சி முதலிய நெசவு சாமான்கள் கிடைக்குமிடம்:

சக்தி டெக்ஸ்டைல்ஸ் ஏஜன்ஸி,

87A, கீழவாசல், மதுரை.

---

எல்லாவிதமான பல்புகள் மற்றும் எலக்ட்ரிக் சாமான்கள் கிடைக்குமிடம்:

**பாப்புலர்**

**எலக்ட்ரிக் கம்பெனி,**

67, மஞ்சணக்காரத் தெரு, மதுரை.

---

தப்பாளி

T. S. ராதாகிருஷ்ணய்யர் & கோ.,

சூரத், ஜ-ன்னடி & பிரிண்டிங் ஜவுளி தயாரிப்பவர்கள் சாயத்திற்கு உத்திரவாதம்.

203, கீழவெளிவீதி, மதுரை.

---

M.A.K. வெங்கட்ராமன் செட்டியார்,

ஜோதி ஐயப்பன் பிராண்டு

சேமியா பாக்டரி,

13, எழுகடல் அக்கிராரம்,

மதுரை.

---


சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்

**“நாராயணா”**

ஸ்வீட், காரம், காபி & டீ ஸ்டால்,

80, தெற்குமாசி வீதி, மதுரை.

---




**ஆர். எம். எஸ். & சன்ஸ்,**

பேக்கரி, டவுன்ஹால் ரோடு, மதுரை.

---

ரெடிமேட் ஆடைகளும் மில் ஜவுளிகளும் விலை சகாயமாய்க்கிடைக்கும்.

“பிரபாத்” ரெடிமேட் ஸ்டோர்,

2, அம்மன் சன்னதி, மதுரை.

---

**ரமியா**

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்,

புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம், விலை மலிவு. சாயத்திற்கு உத்திரவாதம்,

26, மஹால் 4-வது தெரு, மதுரை.

---

“TARZO” PRODUCTS.

- ★ பவுண்டன் பேனா இங்க்
- ★ சீல் அரக்கு
- ★ நீலகிரி தைலம்
- ★ டார்ஜோ பற்பொடி

வாங்கி உபயோகியுங்கள்.

---

N. G. கிருஷ்ணமாச்சாரி & பிரதர்ஸ்,

சூரத், ஜ-ன்னடி ஜவுளி தயாரிப்பாளர்கள்,

உத்திரவாதமுள்ள கெட்டிச்சாயம்.

34, கான்சாமேட்டுத் தெரு,

(நியூ சினிமா சமீபம்) மதுரை.

---

காயத்திரி ஸ்டோர்,

புதுப்பட்டு & நூல்ஜவுளி வியாபாரம்,

விலை சகாயம் சாயத்திற்கு உத்திரவாதம்

31, மால் 5வது ஹனுமார்கோவில் தெரு,

— மதுரை. —

---

P. S. A. சுந்தரகோபாலய்யர்,

—: புரோப்ரைட்டர் :—

**சாந்தாராம் ஸ்டோர்ஸ்,**

நூதன புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம்,

2, லக்ஷ்மிபுரம் 1-வது தெரு, மதுரை.

## உங்கள் எதிர்கால பலன்கள். 3 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1.

1 முதல் 3 கேள்விகள் வரை, சுத்தமாக எழுதி அடியிற்கண்ட அச்சுக் கூபனுடன் ரூ. 1-க்கு போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும். ரூ. 1 மணியார்டர் செய்யலாம். வி. பி. கிடையாது. ஸ்டாம்புகள் கூடா.

ஜோதிஷ சாஸ்திர ரீதியாகப் பதில் எழுதி அனுப்பப்படும்.

☞ ஜாதகம் இல்லாதவர்கள், கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிடவும்.

மானேஜர், "ஞானகுரு" பதிப்பகம், (3 கேள்விகள்)
5, கான்பாளையம் 3 வது தெரு, மதுரை. (S. I.)

கூபனை இங்கே கத்தரிக்கவும்.

தேதி:- "ஞானகுரு" ஜோதிஷ அச்சுக்கூபன்.

பெயர் ..........

விலாசம் ..........

..........

ஊர், ஜில்லா ..........

தொழில் ..........

வயது .......... கையெழுத்து ..........

---

S. S. கிருஷ்ணமூர்த்தி,
வெள்ளை நூல் & பெயிண்ட்
வார்னீஷ் டிரைகலர் வியாபாரம்,
விலை சகாயமாய்க் கிடைக்கும்.
64, மஞ்சணக்காரத் தெரு,
மதுரை.

---

சகலவிதமான வியாதிகளுக்கும் சிறந்த மலையாள ஆயுர்வேத மருந்துகள் கிடைக்குமிடம்:—
மலையாள மெடிக்கல் ஹால், (Regd.)
189, வக்கீல் புதுத்தெரு,
(தபால் பெட்டி நெ. 27), மதுரை.

---

திருப்பரங்குன்றம்,
K. M. K.
கார்த்திகேயன் கம்பெனியின்
சந்தனாதி அரைக்கீரை விதை குளிர் தாமரை, மிளகாய் தைலங்கள் சுத்தமான என் எண்ணையில் தயார் செய்தது. மற்றும் உள்ள வாசனை சாமான்களை உபயோகியுங்கள்.

---

"நெப்போலியன் கியூர்"
நிகரில்லாத வெட்டை ரோக நிவாரணி. ARTERIES நாடிகளில் துரிதமாகச் சென்று ரத்த சுத்தி செய்வதில் இணையற்றது.
சாந்தி வைத்திய நிலையம்,
250, கிருஷ்ணாபுரம் 2 நிர். சந்து,
ராமநாதபுரம் ரோடு, மதுரை.

---

ஹிருஷிகேஸ், சுவாமி சிவானந்தரின் ஆங்கில நூல் மொழிபெயர்ப்புகள்:-

(1) சிவானந்தர் போதனை விளக்கம் அணா 6. (2) மௌனமும் மதச் சின்னங்களும் ஞானமுத்துக்களும் அணா 12. ஷை 2 நூல்களும் விலை ரூ. 1. தபால் செலவு அணா 8. ரூ. 1—8—0 M. O. செய்க. வி. பி. இல்லை. போஸ்டல் ஆர்டர், ஸ்டாம்புகள் கூடா.

"ஞானகுரு" பதிப்பகம், 5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S. I.)

ஒரிஜினல்

# S. R. B.

## ஆண்டுகள் மாறுகின்றன

இன்று இருப்பவை நாளை காணப்படுவதில்லை

நாகரீகமும் நாளுக்குநாள் முற்றிக்கொண்டே வருகிறது

அதற்கேற்ப

## பட்டு புடவைகள், தாவணிகள், பாவாடைகள், ரவிக்கைகள்

இன்னும் அநேக பரிசு தினுசுகள்

அந்தந்த சீஸன்களுக்கேற்றபடி தருவிக்கப்படுகின்றன.

இவைகளெல்லாம்

நீடித்து உழைக்கக்கூடியவை : நிறம் மாருமலிருப்பவை

பார்க்கப் பரவசமளிப்பவை : உடுப்பதற்கு உற்சாகமளிப்பவை

தேவைக்கு நேரில் வந்து பாருங்கள்.

## S. R. B.

## குப்புசாமி அய்யர் & சன்,

**மதராஸ்.** ❖ ❖ **மதுரை.**

117, நயினியப்பநாயக்கன் தெரு,
மதராஸ்-3.
போன் 3506.

280, கீழமாரெட் வீதி,
மதுரை.
போன் 36.

Regd. No. M. 5664. "GNANA GURU" MONTHLY.


# ஈஸ்வர்லால் ஸ்டோர்ஸ்

[புரோப்ரைட்டர் ஸ்ரீ V. S. M. மோஹன்ராம்]

15A, மால் வடம்போக்கித் தெரு, மதுரை.

------ ★ ------

எங்களிடம் கைத்தறியில் தயாரித்த

★ சேலை தினுசுகளும்

★ துண்டு ரகங்களும்

★ பெட்ஷீட் ரகங்களும்

இன்னும்

மதுரை நிட்டிங் கம்பெனி

சிங்க மார்க் பனியன் தினுசுகளும்

சகாய விலையில்

மொத்தமாகக் கிடைக்கும்.

முருகன் திருவருள் வேல் (வெள்ளி) ரூ. 6. முருகன் கவசம் ரூ. 6.

☞ ஜாதகம் கணிக்க, பிறந்த ஊர், ஹல, மூ-, உ, மணி குறிப்பிடுக.

நேரில் ஜாதகம் பார்ப்பதில்லை. முழுத்தொகையும் அனுப்புக. வி.பி.கிடையாது.

(ஸ்தாபிதம் 1941 ஹு) உ அலுவல் காலை 7–10, பிற்பகல் 2–4.



## முருகன் ஜோதிஷ ஆஸ்ரமம்,

S. G. இராமலிங்கம், B. A., ஜோதிஷர், சொற்பொழிவாளர், இராஜயோகி, ஹிருஷிகேஸ், சுவாமி சிவானந்தரின் சிஷ்யர் & "ஞானகுரு" மாதப்பத்திரிகையின் ஆசிரியர்.

"ஞானகுரு" ஆபீஸ், கான்பாளையம் 3, (கீழவெளிவீதி) மதுரை.

(1) ராசி நவாம்சத்துடன் ஜாதகம் கணிக்க ரூ. 5. இலக்கின ஸ்புடத்துடன் எழுத ரூ. 7. (2) நவக்கிரக ஸ்புடங்களுடன் எழுத ரூ. 15. (3) தசவர்க்கம், அஷ்டவர்க்கம், பாவச்சக்கரம் முதலியவைகள் பொதுப்பலன்களுடன் எழுத ரூ. 50. (4) எதிர்கால 1 முதல் 5 கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. 12 மாதப் பலன் எழுத ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. (5) ஒரு ஜாதகத்திற்கு ஆயுள், களத்திரம், புத்திரன், யோகம், அவயோகம் மாதா பிதா கர்மம் முதலிய 6 அம்சங்களுக்கு பதில் எழுத ரூ. 10. ஷெ ஒருஅயிட்டத்தை மட்டும் ஸாந்தி பரிகாரத்துடன் விளக்கி எழுத ரூ. 10. (6) எதிர்கால ஒரு திசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10.

☞ முகூர்த்த நிர்ணயமும் விவாகப் பொருத்தங்களும் கவனிக்கப்படமாட்டா.


Edited & Published by S. G. Ramalingam, B. A., and Printed at the Rajeswari Press, Palace Road, Madurai:–1954.